DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.611/2022 P.W.10

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகன் | த-பெ | சிவபெருமாள் |
| ஊர்: | : | திண்டுக்கல் | | |
| வயது: | : | 61/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | திண்டுக்கல் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2025

**எதிரி ஆஜர். சாட்சி திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் திண்டுகல்லில் வசித்து வருகிறேன். காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 10.09.2016 அன்று குற்ற எண்.524/2016 இதச பிரிவு 392 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முத்து கிருஷ்ணன் என்பவரால் பதிவுசெய்யப்பட்டது. பின்னர் முதல் கட்ட விசாரணை மேற்கொண்ட அவர் மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை எனது வசம் ஒப்படைத்தார்.

2) நான் வழக்கு கோப்பினை பார்வையிட்டு இவ்வழக்கில் முதல் விசாரணை மேற்கொண்ட அதே சாட்சிகளை விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் அவர்களிடம் சொன்ன விபரங்களை என்னிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவுசெய்யவில்லை. ஆனால் புகார்தாரர் மற்றும் பட்டியல் சாட்சிகள் 12 மற்றும் 13 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 21.12.2016 அன்று காலை 10.00 மணியளவில் பாரிநகர் அழகப்பர் சிலை அருகில் வைத்து TN55AQ8323 என்ற பல்சர் வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை பிடித்து விசாரணை செய்ததில் அதில் ஒருவருடைய பெயர் குமார் என்றும் பின்னால் அமர்ந்து வந்த நபர் சதீஸ்குமார் என்று கூறியவர்களை விசாரணை செய்தபோது பல குற்ற வழக்குகளில் ஈடுபட்டதை எவ்வித தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஒப்புக்கொண்டார்கள். அதில் குறிப்பாக குமார் என்பவரை

வழக்கின் காரணம் கூறி 10.05 மணிக்கு கைது செய்தேன். பின்னர் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வீரப்பன் மற்றும் பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

3) **என்னை அழைத்து சென்றால் எனது வீட்டில் இருக்கும் நான் அத்து சென்ற மறைத்து வைத்துள்ள நகைகளையும் முருகேசனிடம் கொடுத்த நகைகளையும் மற்ற நகைகளையும் என் வீட்டில் இருக்கும் சம்பவத்தில் பயன்படுத்திய எனது மற்றொரு Honda வாகனத்தையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 8**. அவருடைய உறவினர் வீட்டில் வைத்து 18.00 மணிக்கு வழக்கு சொத்தினை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அத்தாட்சி அசாஆ 9.** பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் காவல் நிலையம் வந்து காவல் துறை ஆவணங்களில் பதிவு செய்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்தை படிவம் 95 வாயிலாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 95 அசாஆ 10**. பின்பு எனது புலன்விசாரணையை நிறைவு செய்து 27.01.2017 அன்று மேற்சொன்ன பிரிவின் அடிப்படையில் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

1) புகாரை எழுதியது யார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கின் சாட்சிகளை எங்கே எப்போது விசாரணை செய்தேன் என்றால் 14.11.2016 அன்று விசாரணைக்கு எடுத்து கொண்டேன். வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் காணாமல் போன பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.12.05 14:45:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.